பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 29 | சனிக்கிழமை | 16.12.2023 | அதிர்வு 137

## மொட்டுவின் தலைவராக மீண்டும் மஹிந்த தெரிவு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாடு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் 06▶



# பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொண்ட தலைவர் நானே



## மீண்டும் போர் வெற்றிக் கோஷம் எழுப்பி ஆட்சியமைக்கத் துடிக்கின்றார் மஹிந்தர்

**“தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொள்ள எந்தவொரு முன்னாள் ஜனாதிபதியும் முன்வரவில்லை. ஆனால், நான்தான் அவரை நேருக்கு நேர் எதிர்கொண்டேன்.”**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.** 05▶

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க நான் தயார்

### ரொஷான் அதிரடி அறிவிப்பு



“இலங்கையில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்க வாய்ப்பு வழங்கப்பட்டால் நான் நிச்சயம் அந்தத் தேர்தலில் போட்டியிடுவேன்.”

– இவ்வாறு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க 06▶

## அடுத்த தேர்தலில் வெற்றி நிச்சயம்

### பஸில் சூளுரை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அடுத்த தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறும் என்று அந்தக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று 06▶

## மற்றுமொரு சீன ஆய்வுக் கப்பல் ஜனவரி மாதத்தில் இலங்கைக்கு

### தொடர்கின்றது இந்தியாவைச் சீண்டும் நடவடிக்கை



சீனாவின் மற்றுமொரு ஆய்வுக் கப்பல் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு வரவுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதியளவில் அந்தக் கப்பல் 06▶



இறுதி யுத்தத்தின் போது தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் தொடர்பில் இந்தியாவின் போக்கு – நிலைப்பாடு – யாது என்பதைத் தமிழர்கள் உணர்ந்து கொள்ள ஓர் உரைகல் இது:-

யுத்தமுனையில் போர்க் குற்றங்களை மோசமாக இழைத்தவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் இப்போது இலங்கை முப்படைகளின் கூட்டுத் 06▶

# ஆசிரியர், அதிபர் இடமாற்றங்களில் பாரபட்சத்திற்கு இடமளிக்க முடியாது

## வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு



ஆசிரியர், அதிபர் இடமாற்றங்களில் பாரபட்சத்திற்கு இடமளிக்க முடியாது என ஆசிரியர், அதிபர் சங்கங்களுக்கு வட மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, இடமாற்றங்கள் வழங்கப்படாமை, அதிபர் நியமனங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம், வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், வட மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸை தனித்தனியாக சந்தித்து கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இந்தச் சந்திப்புகள் இடம்பெற்றன.

புதிய அதிபர் நியமனத்தால், இதுவரை பதில் கடமை ஆற்றியவர்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர் எனவும், கடினமான காலப்பகுதியில் பாடசாலை சமூகத்தை கட்டியெழுப்பப் பாரிய முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர் எனவும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தினர் ஆளுநரிடம் தெரிவித்துள்ளனர்.

போட்டிப் பரீட்சையூடாக தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த வாரம் அவர்கள் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளனர் எனவும், இதனால் பல வருடங்களாக பதில் கடமை புரிந்த அதிபர்கள், பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடயங்களை கேட்டறிந்த வட மாகாண ஆளுநர், கோரிக்கைகளை பரிசீலிப்பார் எனவும், தேவை ஏற்படின் ஜனாதிபதியின் கவனத்திற்கு விடயங்களைக் கொண்டு செல்வார் எனவும் உறுதியளித்துள்ளார்.





# லெபனான் பிரஜையிடம் 14,000 டொலரை திருடிய சீன நபர் கட்டுநாயக்காவில் கைது

(ரஸீன் ரஸ்மின்)

லெபனான் பிரஜை ஒருவரிடமிருந்து 14 ஆயிரம் அமெரிக்க டொலர்களை திருடினார் எனச் சந்தேகிக்கப்படும் சீனப் பிரஜை ஒருவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான 48 வயதுடைய சீனப் பிரஜை, இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்தபோது, அவரை குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்து விமான நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பணத்தைத் திருடிய சீன நபரைக் கைது செய்ய கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரும், விமான நிலைய சுற்றுலா பொலிஸாரும் இணைந்து பல தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும், அவரை கைது செய்ய முடியாமல் போனதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனப் பிரஜை கைது செய்யப்பட்ட போது அவரிடம் 827,712.76 ரூபா பெறுமதியான உலகின் பல்வேறு நாடுகளின் நாணயத் தாள்கள் இருந்தன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தான் உலகம் முழுவதும் தேயிலை விற்பனையில் ஈடுபடும் விற்பனையாளர் எனவும், அதன் மூலம் கிடைத்த



பணம்தான் தன்னிடம் இருப்பதாகவும் கைதான சீனப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் அதுதொடர்பாக மேலதிக விசாரணையை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணையின் பின்னர் சந்தேக நபரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




### தமிழர்களுடைய உரிமையை நசுக்கும் செயற்பாட்டிற்காக

# சுமண தேரரை மட்டு மேய்ச்சல் தரைக்கு பொலிஸார்தான் வரவழைத்துள்ளார்கள்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சீற்றத்துடன் குற்றச்சாட்டு

**(கனகராசா சரவணன்)**

மட்டு மேய்ச்சல் தரையான மயிலத்தமடு பிரதேசத்திற்கு நாங்கள் செல்வதைத் தடுப்பதற்காக இனவாதத்தை தூண்டிவிட்டு, அந்த இனவாதத்தின் ஊடாக முழுக்கமுழுக்க தமிழர்களுடைய உரிமையை நசுக்கும் செயற்பாட்டிற்காக அம்பிட்டிய சுமணரட்ன தேரரை பொலிஸார் வரவழைத்துள்ளனர் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அந்த மேய்ச்சல் தரைப் பகுதிக்குப் பண்ணையாளர்கள் சகிதம் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உட்பட்ட குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை மயிலத்தமடு பொலிஸ் காவலரணில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டனர். அத்ச்ன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் ஊடாக கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மயிலத்தமடு பகுதிக்கு செல்ல இருக்கிறோம் என அறிவித்திருந்தோம். அதற்கு உரிய ஒத்துழைப்பை பொலிஸார் வழங்க வேண்டும் எனக் கேட்டார். அப்போது அவர் ஜனாதிபதியின் செயலாளரின் அனுமதி இல்லாமல் அங்கு செல்ல அனுமதி இல்லை எனத் தெரிவித்தார்.

அதனையடுத்து, ஜனாதிபதியின் செயலாளரிடம் நான் மயிலத்தமடு பகுதிக்குச் செல்ல இருக்கிறேன் எனவும், பொலிஸாருக்கு அனுமதி உத்தரவை வழங்குமாறும் கேட்டேன். அப்போது அவர், நீங்கள் நாட்டில் எந்தவொரு பகுதிக்கும் செல்ல உரிமை இருக்கின்றது, அதற்கு எவரிடமும் அனுமதி கேட்க வேண்டியதில்லை, அங்கு செல்வதற்கு அனுமதி பெறவேண்டும்

**(11ஆம் பக்கம் பார்க்க)**





# குற்றவாளிகளை அடையாளம் காணும்

# புதிய அமைப்பு பொலிஸாரால் அறிமுகம்

போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் காணும் செயல்முறையை நெறிப்படுத்தும் புதிய அமைப்பை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களையும் இணைக்கும் விசேட தரவு அமைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதிய முறையின் கீழ் போதைப் பொருள் குற்றத்துடன் தொடர்புடைய எந்தவொரு நபரின் உள்ளீட்டையும் செயல்படுத்துவதன் மூலம் பொலிஸாரினால் கடந்த கால குற்றவியல் பதிவுகளை மீட்டெடுக்க முடியும்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான அனைத்துக் கைதுகளின் விவரங்களும் தரவு அமைப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரவு அமைப்பை அறிமுகப்படுத்தும் நிகழ்வொன்று பொலிஸ் தலைமையகத்தில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

அதன்போது மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருக்கு திட்டமிடப்பட்ட விசேட போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் செயலமர்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## சுமண தேரரை மட்டு மேய்ச்சல் தரைக்கு...

**(10ஆம் பக்கத் தொடர்ச்சி)**

எனக் கட்டளை ஏதும் இடப்படவில்லை, எனவே அனுமதி தேவை இல்லை, அங்கு தாராளமாகப் போக முடியம் என்றார்.

நீங்கள் சொன்னாலும் பொலிஸ் அங்கு தடுக்கின்றனர், ஆகவே உரிய முறையில் அங்குள்ளவர்களுக்கு கட்டளையை வழங்குமாறு தெரிவித்த போது, அவர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் உதவிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் ஊடாக ஒத்துழைப்பை வழங்குமாறு அவர்களிடம் தான் சொல்வார் எனத் தெரிவித்தார்.

அதன் பின்னணியில் இன்று (நேற்று) காலை 10 மணியளவில் நாங்கள் 10க்கும் மேற்பட்டோர் மயிலத்தமடு பகுதிக்கு இரு வாகனங்களில் சென்றோம். அங்கு காவலரண் பகுதியில் வீதிக்குக் குறுக்கே நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். பொலிஸார் எங்களை மறித்தனர்.

அப்போது கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, எழுத்து மூலமாக ஜனாதிபதியின் செயலாளரின் அனுமதி இல்லாமல் உள்ளே அனுமதிக்க முடியாது என தெரிவித்தார். அதையடுத்து நான் உடன் ஜனாதிபதியின் செயலாளருடன் பேசினேன். அவர் தெளிவாக தெரிவித்தார், தனக்கு அப்படி ஒரு கட்டளையிடப்பட்டதாக எந்த விதமான ஆதாரமும் கிடையது, எப்போது அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலிஸாரிடம் கேட்குமாறு கேட்டார்.

அதற்கு நான் கடந்த ஒக்டோபர் 15 ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார் என்ற போது அவர் இது தொடர்பாக மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரானிடம் இது தொடர்பாக ஆராய்ந்து, பின்னர் தொடர்பு கொள்வதாகக் கூறி தொலைபேசியை நிறுத்திவிட்டார்.

இவ்வாறான நிலையில் நாங்கள் இருந்தபோது, அம்பிட்டிய சுமணரட்ண தேரர் சில காடையர்களுடன் அங்கு வந்து தூஷண வார்த்தைகள் பேசி இனவாதத்தை கக்கிகொண்டு நாங்கள் யாழில் இருந்து வந்திருக்கிறோம் எனத் தெரிவித்து அட்டகாசத்தில் ஈடுபட்டார்.

நாங்கள் இன்று (நேற்று) மயிலத்தமடுவிற்கு காலை 10 மணிக்கு போவது பொலிஸாருக்கு மாத்திரம்தான் தெரியும். வேறு எவருக்கும் தெரியாது. பொலிஸ் அறிவித்துதான் தேரர் கடையர்களுடன் திட்டமிட்டு வந்து, மேல்மட்டத்தில் இருந்து ஜனாதிபதி செயலகம் அனுமதி வழங்கினாலும், ஓர் இனக் கலவரம் நடக்கும் என்பற்காக கூட இந்த நேரத்தில் விடமுடியாது எனச் சுட்டிக்காட்டி தடுப்பதற்கு திட்டமிட்டு சதி மேற்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, சாதாரணமாக ஓர் இடத்திற்குப் போவதை தடுப்பாதாக இருந்தால் இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று – அரசாங்கம் ஒரு முடிவெடுத்து பாதை மூடுவதற்கு வர்த்தமானியை வெளியிட்டு அதைத் தடைசெய்ய வேண்டும். அல்லது நீதிமன்றம் அங்கு போவதற்குரிய பயணத்தடையை வழங்கி இருக்கவேண்டும். இந்த இரு வழிகளை தவிர, வேறு எந்தக் கோணத்திலும் வந்து எங்களுடைய பயணத்தைத் தடுப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். மேலதிகமான ஆலோசனைகளைப் பெற்று இதனை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி முடிவு எடுப்போம்.

பண்ணையாளர்களை பொறுத்த மட்டில் இன்று நடந்த சம்பவத்துடன், இதுவரைக்கும் 90 நாளுக்கு மேல் போராடி வருகின்ற இவர்களது நிலைமை ஒவ்வொரு நாளும் மோசமாகி வருகின்றது. சொத்துக்கள் திட்டமிட்டு அழிக்கப்படுன்றன. அவர்களின் மேய்ச்சல் தரையைக் கண்முன்னால் அழித்து வேறுவேறு நபர்களுக்கு வழங்கிவருகின்றனர். இதனை நாடாளுமன்றத்தில் தேசிய பிரச்சனை தொடர்பாகக் கட்சி தலைவர் கொண்டுவரமுடியும் என்ற ரீதியில் அதனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து சர்வதேச ரீதியில் வெளிப்படுத்துவோம். – என்றார்.

## பிரபாகரனை நேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"எனது ஆட்சிக் காலத்தின் பின்னரான காலப்பகுதியில், இலங்கையை ஆட்சி செய்த வேறு எந்தவொரு ஜனாதிபதியும் போரை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை" – என்றும் அவர் குறிப்பிட்டார்.



கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையைக் கடந்த 2005 ஆம் ஆண்டு நான் ஏற்றுக்கொள்ளும் போதும் எமது கட்சி மீது பலர் சேறு பூசினார்கள்.

எனினும், நாடு இரண்டாகப் பிளவுபடுவதைத் தடுக்குமாறு மாத்திரமே அன்று மக்கள் எம்மிடம் கோரினார்கள்.



முப்பது வருட ஆயுதப் போரில், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை எந்தவொரு ஜனாதிபதியாலும் எதிர்கொள்ள முடியவில்லை.

சில ஜனாதிபதிகள் போரை நிறுத்துமாறு கோரி பிரபாகரனுக்கு ஆயுதங்களையும் வழங்கினார்கள்.

அந்த ஜனாதிபதி யார் என்று நான் கூற மாட்டேன். இவ்வாறான போரை எனக்குப் பின்னர் வந்த இலங்கையின் மற்ற ஜனாதிபதிகள் எதிர்நோக்கும் நிலையை நாம் உருவாக்கவில்லை.

சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களும் சமாதானமாக வாழக்கூடிய நிலையை நாம் ஏற்படுத்தினோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த போது, குழந்தைகளாக இருந்தவர்கள், தற்போது போர் என்றால் என்ன என்று தெரியாத வாழ்க்கையை வாழ்கின்றார்கள்.



எனினும், மக்களை ஏமாற்றி தங்கள் அரசியல் நோக்கங்களுக்காகச் செயற்படும் தரப்பினர் இன்றும் இருக்கின்றார்கள்.



இவ்வாறானவர்கள் சர்வதேசத்தின் வலைகளில் சிக்கி எமது சொந்த நாட்டைப் பாதிப்படைய செய்கின்றார்கள்.

எமது கட்சியின் ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட பொருளாதார நிலை குறித்து தற்போதும் பலர் கருத்துக்களை முன்வைக்கின்றார்கள்.

எம்மைக் குற்றவாளிகளாக வெளிக்காட்டும் முயற்சிகளில் பலர் ஈடுபடுகின்றார்கள்.

2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நாம் நாட்டின் பொருளாதாரத்தை 6 வீதத்தால் வளர்ச்சியடையச் செய்திருந்தோம்.

இந்தநிலையில், இலங்கையைச் சரியான பாதையில் கொண்டு செல்ல சரியானதொரு அரசியல் வழிநடத்தல் தேவை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிகக் குறுகிய காலத்தில் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை நாட்டை யாருடைய சொந்தத் தேவைக்காகவும் பிளவுபட நாம் இடமளிக்க மாட்டோம்.

அனைத்து சவால்களையும் எதிர்நோக்கக்கூடிய ஒரே நாடு இலங்கை என்பதை சொல்வதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

எமக்குள்ள மக்கள் ஆணையுடன் எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில் நாம் போட்டியிடுவோம். பாரிய வெற்றியையும் அடைவோம். எமது வெற்றிப் பயணத்தில் பங்கேற்க பல அரசியல் கட்சிகள் ஆர்வமாகக் காத்திருக்கின்றன." – என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

அவர் 2019 இல் இலங்கை இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட போது கொழும்



பில் உள்ள கனடா தூதரகம் அதை விமர்சித்து, அந்நியமனத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தது.

மனித உரிமை மீறல் நடவடிக்கைகள், யுத்த குற்றங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஜெனரல் சவேந்திர சில்வாவும் அவரது நேரடிக் குடும்பத்தவர்களும் அமெரிக்காவுக்கு பயணம் செய்வதற்குத் தடை விதித்திருக்கின்றது அமெரிக்கா. அந்த நாட்டின் விரும்பப்படாத நபராக அவர் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்.

ஆனால் எங்களின் தொப்புள் கொடி உறவுகள் வதியும் தமிழகத்தையும் உள்ளடக்கிய இந்தியா ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுக்கின்றது.

இந்தியாவின் டேராடூனில் இந்திய இராணுவ அகாடமியின் பயிற்சி முடித்து வெளியேறும் இராணுவத்தினருக்கான அணி வகுப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்காக ஜெனரல் சவேந்திர சில்வாவை இந்தியா அழைத்திருந்தது. புதுடில்லிக்கு விமானத்தில் வந்திறங்கிய ஜெனரல் சவேந்திர சில்வாவும் அவரது துணைவியாரும் டேராடூன் சென்று திரும்பத் தனியான விசேட ஜெட் விமானம் ஒன்றை வழங்கியது இந்திய விமானப்படை. ஒரு நாட்டின் அதிபருக்கு வழங்குவது போன்ற சிறப்பு அந்தஸ்து ஜென்ரல் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்குக் கிடைத்தது.

இந்த இந்தியாவின் மூலம் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்று இலவு காத்த கிளி போல காத்து கிடக்கின்றார்கள் நம் தலைவர்களும் சில ஊடகவியலாளர்களும்...!

\+ \+ \+

மீண்டும் அதிகாரத்தைப் பிடிக்கும் ஆசையுடன் களமிறங்கி இருக்கின்றது மொட்டுக் கட்சி.

நேற்று மொட்டுக் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் உரையாற்றிய அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையின் முடிவில் கடைசியில் தமிழில் ஓரிரு வார்த்தைகள் பேசவும் தவறவில்லை.

அவரின் பேச்சும், கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் உரையும் மீண்டும் அரசியல் அதிகாரப் பதவிகளை கைப்பற்றும் நப்பாசையுடன் ராஜபக்ஷக்கள் களமிறங்கி விட்டனர் என்பதை காட்டுகின்றன. அதிகாரத்தைத் தனது கைகளுக்கு மொட்டுக் கட்சி எடுப்பதற்கு மக்கள் – குறிப்பாக தென்னிலங்கை மக்கள் – இடம் அளிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மொட்டுக் கட்சியின் தேசிய மாநாட்டை ஒட்டிய ஒரு கொசுறு தகவல் இது:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேகச் செயலாளராக இப்போது பணியாற்றுபவர் யாழ்ப்பாணத்துத் தமிழரான கீதநாத் காசிலிங்கம். முன்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகக் கடமையாற்றிய போது அவரின் பிரத்தியேகச் செயலாளராகவும், பிரதமரின் வடக்கு – கிழக்கு இணைப்பாளராகவும் பணியாற்றிய இளைஞர் கீதநாத். அவரை இப்போது மொட்டுக் கட்சியின் தேசிய மாநாட்டின் போது தெரிவான கட்சியின் புதிய நிறைவேற்றுக் குழுவில் ஓர் உறுப்பினராக நியமித்திருக்கின்றார் கட்சித் தலைவர் மஹிந்தர். கட்சியின் புதிய நிறைவேற்று குழு இன்று கூடும்போது அதில் கீதநாத்தும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அடுத்த தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கட்சியின் அரசொன்றை ஆட்சிக்குக் கொண்டுவர அனைவரும் தயாராகுவோம். அதைச் சிறப்பான அரசாக மாற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நாட்டு மக்களை மரண அச்சத்தில் இருந்து காப்பாற்றிய ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே.

அதேபோல் ஊருக்குச் செல்லும்போது கூட மஞ்சள் கடவையைத் தவிர வேறு இடத்தில் பாதையைக் கடந்து செல்ல வேண்டாம் என நான் அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன்.

எந்த இடத்திலாவது எமது தவறுகளைக் கண்டுபிடிக்க சமூக ஊடகங்கள் காத்துக் கிடக்கின்றன.இதனால், நாம் மிகவும் ஒழுக்கமான, மஹிந்த ராஜபக்ஷ எமக்குக் கற்றுக் கொடுத்த உன்னத பாடங்களைப் படிப்பினையாகக் கொண்டு எமது கட்சியை முன்மாதிரியான கட்சியாக மாற்றி எதிர்வரும் காலங்களில் செயற்படுவோம்.

இதன் காரணமாக நாம் முதுகெலும்பு இல்லாதவர்கள் என்று எண்ணிவிடக் கூடாது. நாங்கள் அதற்குத் தயாராக இருக்கின்றோம் என்பதைக் கூற வேண்டும். வீதியில் செல்லும் நாய் மீது கல்லெறிந்தால், நாய் குரைத்து விட்டு, மேலும் வேகமாக ஓடும். ஆனால், சிங்கத்தின் மீது கல்லெறிந்தால், கல்லெறிந்தது யார் என்று திரும்பிப் பார்க்கும். நாங்களும் சிங்கத்தைப் போன்றவர்கள்.

எங்கள் மீது கல்லெறிய வேண்டாம். நாங்கள் பார்த்துக்கொள்வோம்." – என்றார்.

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டியவில் ஓமல்பே சோபித தேரரை நேற்று சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, ரொஷான் ரணசிங்க இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையின் அரசியலில் நான் தொடர்ந்தும் தனித்துச் செயற்படுவேன்.

என்னால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் திட்டங்களை முன்வைக்கும் தரப்பினருக்கு ஆதரவளிப்பது தொடர்பில் எதிர்காலத்தில் யோசிக்க முடியும்.

எனக்கு எதிர்க்கட்சியுடன் இணைய வேண்டிய தேவை இல்லை. முன்னாள் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை மக்களுக்காக நிறைவேற்றும் பணிகளை மாத்திரம் தற்போது நான் முன்னெடுத்து வருகின்றேன்." – என்றார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ரொஷான் ரணசிங்க விலகியமை ஒரு சிறந்த தீர்மானம் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மற்றுமொரு சீன ஆய்வுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையை அண்மிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் "ஷியாங் யாங் ஹோங் 03" என்ற ஆய்வுக் கப்பலே இலங்கைக்கு வரவுள்ளது. அந்தக் கப்பல் எதிர்வரும் மே மாதம் வரையில் இந்து சமுத்திரத்தில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் கொழும்பு மற்றும் மாலைத்தீவு ஆகிய துறைமுகங்களில் அந்தக் கப்பலை நங்கூரமிடுவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னதாக சீனாவின் "ஷி யான் 6" என்ற ஆய்வுக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் நங்கூரமிடுவதற்கு இந்தியத் தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் அந்தக் கப்பல் இலங்கை மற்றும் சிங்கப்பூர் கடற்பரப்புகளில் ஆய்வை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மொட்டுவின் தலைவராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றது.

இந்த மாநாட்டிலேயே பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் ஏகோபித்த இணக்கப்பாட்டுடன் கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை காமினி லொக்குகே முன்மொழிந்தார். அதை ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வழிமொழிந்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மொட்டு பூக்குமா? அல்லது வாடி வீழுமா?

புதிதாக உருவாக்கப்பட்டு, எட்டு வருட காலத்தில் பின்னர் தனது இரண்டாவது தேசிய மாநாட்டை நேற்று கொழும்பில் கூட்டி இருக்கின்றது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மொட்டுக் கட்சி).

உருவாகி மிகக்குறுகிய காலத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய மூன்றிலும் அடுத்தடுத்து இமாலய சாதனை படைத்த கட்சி அது.

ஆனால் வந்த வேகத்திலேயே, வெற்றியைத் தொலைத்து நடுவீதிக்கு வந்ததும் அந்தக் கட்சிதான். அதற்குத் திரும்பவும் உயிரூட்ட முயற்சிக்கின்றனர் அதன் தலைவரும் மற்றும் தேசிய அமைப்பாளருமான ராஜபக்ஷ சகோதரர்கள் மஹிந்தரும் பஸிலும்.

அந்த முயற்சி வெற்றி அளிக்குமா, பலிக்குமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

என்னதான் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் - ராஜபக்ஷக்களுக்கு எதிரான எதிர்ப்புணர்வு நிலவினாலும் - மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெற்கின் கிராமப்புறங்களில் ஒரு முகவசீகர செல்வாக்கு இருப்பது மறுக்க முடியாத உண்மை. எஞ்சியுள்ள அந்த ஒன்றை வைத்துத்தான் மொட்டுக்கட்சி காய் நகர்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

வெல்ல முடியாதது எனக் கருதப்பட்ட யுத்தத்தை வென்றவர், விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தவர் என்ற பழைய புராணங்களுடன் ஏற்கனவே மஹிந்தருக்கு உள்ள இமேஜை வைத்து, கட்சியின் சரிந்த செல்வாக்கைமீளக்கட்டிஎழுப்புமுயற்சிஎவ்வளவு தூரம் பலிக்கும் என்பது கேள்விக்குரியது.

நாட்டை எழுபத்தியைந்து ஆண்டுகள் மாறி மாறி ஆண்டு கோலோச்சிய இரண்டு பெரும் கட்சிகளும் கடந்த பொதுத் தேர்தலில் அடியோடு துவண்டமை நாம் கண்ட உண்மை.

சுதந்திர இலங்கையில் முதல் ஆட்சி அமைத்த ஐக்கிய தேசியக் கட்சியினால் கடந்த பொதுத் தேர்தலில் இலங்கையில் ஒரு மாவட்டத்தில் கூட ஓர் ஆசனத்தைத் தன்னும் வெற்றி கொள்ள முடியவில்லை. தேசியப் பட்டியலில் மட்டுமே ஒரே ஓர் ஆசனத்தை அக்கட்சி பெற்றது.

அதே நிலைமைதான் மற்றைய பிரதான தேசியக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கூட. அந்தக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கஜன் இராமநாதன் மட்டுமே எம்.பியாகத் தெரிவானார். மற்றைய மாவட்டங்களில் எதிலும் அக்கட்சி தேர்தலில் போட்டியிடவில்லை. அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கூட மொட்டுக் கட்சியில் போட்டியிட்டுத்தான் எம்.பியாக முடிந்தது. இந்த வகையில் மொட்டுக் கட்சியின் எம்.பிக்களாக சுதந்திர கட்சியினர் 14 பேர் நாடாளுமன்றுக்குச் சென்றனர்.

பழம்பெரும் கட்சிகளுக்கே இந்தக் கதி என்றால், குறுகிய காலத்தில் வளர்ந்த மொட்டு கட்சிக்கு மக்கள் பேரடி கொடுத்து வீட்டுக்கு அனுப்ப நேரம் செல்லாது என்பதுதான் நிலைமை.

கடந்த பொது தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் மொட்டுக்காட்சி பெருவெற்றியீட்டியது என்பது உண்மைதான். ஜனாதிபதி தேர்தலில் அது ஏறத்தாழ 70 லட்சம் வாக்குகளை பெற்றது. பொது தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களை நாடாளுமன்றத்தில் அது ஈட்டிக் கொண்டது. ஆனால் இந்த இரண்டிலும் அக்கட்சியின் செல்வாக்கு, அதிகாரம் இப்போது இருப்பதாகக் கூறுவது வெறும் வாய்ப்பந்தல் பேச்சுத்தான்.

பொது தேர்தலில்ஓர் எம்.பியாக நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல்நிராகரிக்கப்பட்ட - தோற்றுப்போன - வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவிடம், தமக்கு மக்கள் 70 லட்சம் வாக்குகள் மூலம் கையளித்த ஜனாதிபதி பதவியை ஒப்படைத்தது மொட்டுக் கட்சி. அதனால் அக்கட்சியின் நாடாளுமன்றமும் இன்று ரணிலின் சொற்படியாடும் எடுப்பார் கைப்பிள்ளையாகி விட்டது.

இந்தப் பின்புலத்தில்தான், சளைக்காத விக்கிரமாதித்தன் மீண்டும் மரத்தில் ஏறி மனித உடலை வீழ்த்தி அதை சுமந்து கொண்டு புறப்பட்டான் என்பது போல அடுத்த 'ரவுண்ட்' முயற்சிக்கு இப்போதைய தேசிய மாநாடு மூலம் பிள்ளையார் சுழி போட்டிருக்கின்றது மொட்டுக் கட்சி.

இந்த மொட்டு இனிப் பூக்குமா அல்லது வாடி வீழுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# ராஜஸ்தான் மாநில முதல்வராக பஜன்லால் சர்மா பதவியேற்றார்!

ராஜஸ்தான் மாநில முதல்வராக பஜன்லால் சர்மா நேற்று பதவி ஏற்றார். அவருக்கு அந்த மாநில ஆளுநர் கல்ராஜ் மிஸ்ரா பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

ராஜஸ்தானில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தேர்தல் நடந்த 199 தொகுதிகளில் பா.ஜ.க. 115 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்கான தகுதியைப் பெற்றது.

இதையடுத்து நேற்று ஜெய்ப்பூரில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஆல்பர்ட் வளாகத்தில் இந்த பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், ராஜஸ்தான் மாநிலத்தின் முதல்வராக பஜன்லால் சர்மா பதவியேற்றார். அவருடன் தியா குமாரி, பிரேம் சந்த் பைரவா ஆகியோர் துணை முதல்வர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர்.

## - மோடி, அமித் ஷா பங்கேற்பு




இந்தப் பதவியேற்பு விழாவில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஜே.பி.நட்டா ஆகியோர் பங்கேற்றனர். மேலும், கோவா முதல்வர் பிரமோத் சவந்த், திரிபுரா முதல்வர் மாணிக் சஹா, மகாராஷ்டிர மாநில முதல்வர் ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

முதல்வராக பதவியேற்றுள்ள பஜன்லால் சர்மா, முதல்முறையாக எம்.எல்.ஏ. ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர், ராஜஸ்தானின் பரத்பூர் பகுதியை சேர்ந்தவர். இளம் வயதிலேயே ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்ந்து தீவிர மாக பணியாற்றினார். பா.ஜ.க. மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தில் முக்கிய பதவிகளை வகித்தார். அரசியல் அறிவியல் துறையில் முது கலைப் பட்டம் பெற்றிருக்கிறார்.

# போலி ஆவணங்கள் மூலம் 28 பேருக்கு கடவுச்சீட்டு பெற்றுக்கொடுத்த 6 பேர் கைது

போலி ஆவணங்கள் மூலம் இலங்கையர்கள் 28 பேருக்கு கடவுச்சீட்டு பெற்றுக்கொடுத்த தபால் ஊழியர் உள்ளிட்ட 6 பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரத்தில் இலங்கையர்களுக்கு போலி ஆவணங்கள் மூலம் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி இரவு பட்டுக் கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில், கடவுச்சீட்டுகள் கைமாற்றப்பட்டபோது, சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களி னால் தமிழகத்தில் வசிக்கும் 28 இலங்கையர்களுக்கு கடவுச்சீட்டு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

# தமிழகத்தில் 6 நாள்களுக்கு மழை!

தமிழகத்தில் 6 நாள்களுக்கு பரவலாக மழை வாய்ப்பு காணப்படுகின்றது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்பது குறித்தும் சென்னை வானிலை நிலவரம் எப்படி இருக்கும் என்பது பற்றியும் இந்திய வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் பாலச்சந்திரன் தகவல் வெளி யிட்டுள்ளார்.

மிக்ஜாம் புயலின் தாக்கத்தால் சென்னையில் பெய்த கனமழை ஒட்டு மொத்த நகரையே வெள்ளத்தில் ஆழ்த் தியது.

டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் அதிகாலை வரை கொட்டி தீர்த்த கனமழையால் சென்னை மாநகரமே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது.

மழை விட்ட பின்னரும் வெள்ள நீர் வடிந்து இயல்பு நிலை முழுமையாக



திரும்ப குறைந்தபட்சம் ஒருவார காலம் ஆனது.

தென் மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

எனினும், சென்னையில் கடந்த ஒரு வாரமாக மழையின்றி பனியின் தாக்கம் அதிகரித்தது. இந்த நிலையில், நேற்று மிதமான மழை பெய்தது.

இதனையடுத்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலசந்திரன் செய்தியாளர்களுக்கு வழங்கிய நேர்கா ணலில், தற்போது தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக அடுத்து வரும் 6 நாள்களுக்கு தென் தமிழக பகுதிகளில் அநேகமான இடங்களிலும் வட தமிழகத் தில் ஒரு சில இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

கனமழை மற்றும் அடைமழை எச்சரிக்கையை பொறுத்தவரையில் அடுத்து வரும் 24 மணி நேரத்தில் புதுக் கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்க ளில் ஒரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை அடுத்து வரும் இரண்டு தினங்களுக்கு நகரின் சிலபகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அவர் தெரிவித் துள்ளார்.

# யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதி: ஹமாஸ் ஆதரவாளர்கள் உட்பட 7 பேர் கைது




ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டினார்கள் வ்ந்தர குற்றச்சாட்டில் டென்மார்க், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் .7 ஆம் திகதி இஸ்ரேல் மீதுஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் இந்த தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட அப்பாவி பொதுமக்கள் பலரும் உயிரிழந்து வருகின்றனர். சர்வதேச அளவில் இருந்து போர் நிறுத்தத்துக்கான அழுத்தம் அதிகரித்து வருகிறது.

ஆனாலும் காசாவில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து சண்டையிடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டினர் என்ற சந்தேகத்தின் பேரில் டென்மார்க், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று பேர் ஜேர்மனி தலைநகர் பெர்லினிலும், மற்றொருவர் நெதர்லாந்திலும், மூவர் டென்மார்க்கிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று கைது நிகழ்வுகளுக்கும் இடையே ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்று விசாரணை நடைபெற்று வருகிறது.

ஜேர்மனி மற்றும் நெதர்லாந்தில் கைது செய்யப்பட்ட நால்வருக்கும் ஹமாஸ் இயக்கத்துடன் நேரடி தொடர்பு இருந்தனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

டென்மார்க்கில் கைது செய்யப்பட்ட மூவரும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கைது சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜேர்மனி சட்டத்துறை அமைச்சர் மார்கோ புஷ்மேன்,

“இஸ்ரேலிய மக்கள் மீது ஹமாஸ் நடத்தும் பயங்கர தாக்குதல்களைத் தொடர்ந்து, யூத நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் சமீப வாரங்களில் ஜேர்மனியிலும் அதிகரித்துள்ளன. எனவே நம் நாட்டில் உள்ள யூதர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக பயப்பட வேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்த எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்” என்று கூறியுள்ளார்.

# சீனாவில் இரு ரயில்கள் மோதி விபத்து!





## – 500 பேர் படுகாயம்

சீனாவில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் 500 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் – பீஜிங் மாகாணம் ஷங்பிங் நகரில் இருந்து புறப்பட்ட பயணிகள் ரயில் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த ரயில் மற்றுமொரு ரயிலுடன் மோதுண்டதில் விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் இரு ரயில்களிலும் பயணித்த 500 இற்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

விபத்து குறித்து அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்: கட்டடங்கள் அதிர்ந்தன

பாகிஸ்தானில் உள்ள குவெட்டா நகரில் நேற்று நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை 9.13 அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது ரிக்டர் அளவுகோலில் 4.2 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






# வடக்கில் பெருவெள்ளம்!

## இரணைமடு உள்ளிட்ட 30 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றம்

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்தமையால், 14 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், முரசுமோட்டை, ஐயன் கோயில், பன்னங்கண்டி, கண்டா வளை பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாகச் செயற்படுமாறு இரணை மடுக் குளத்தின் நீர்ப்பாசனப் பொறி யியலாளர் சத்தியசீலன் செந்தில் குமரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள் ளது.

பண்டாரவன்னியன் கிராமத்தில் வீடுகள், வயல் நிலங்கள் வெள்ளத் தில் மூழ்கியுள்ளன.

முல்லைத்தீவு – மாந்தை கிழக்கு, வவுனிக்குளம் வான்பாய்வதால் மாந்தை கிழக்கிற்கான போக்கு வரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

செல்வபுரம் – சிவபுரம் வீதியில் உள்ள பாலத்தை மேவி வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துத் தடைப் பட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் முல்லைத்தீவு – துணுக்காய் பிரதே சத்தில் அதிகளவு மழைவீழ்ச்சி பதி வாகியுள்ளது. அங்கு 216 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்யும் பலத்த மழை காரணமாக பல வீதிகளில் போக்கு வரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கிரான் – குடும்பிமலை பிரதான வீதியின் போக்குவரத்து பகுதியளவில் தடைப்பட்டுள்ளது.

அந்த வீதியில் உள்ள நான்கு பாலங்களுக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து பாதிக்கப் பட்டுள்ளது.

இதனால் பாலத்திற்கு மறுபக்கத் தில் உள்ள கிரான் பிரதேச செயல கத்தின் அலுவலக நடவடிக்கைகள் கோரக்கல்லிமடு நூலகத்திற்கு மாற றப்பட்டுள்ளது.

அத்துடன், சித்தாண்டியை அண் மித்த கரையோர பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

நாட்டில் உள்ள 30 நீர்த்தேக்கங் களின் வான்கதவுகள் திறக்கப்பட் டுள்ளன என நீர்ப்பாசனத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிழக்கு, தென், ஊவா மாகாணங்களிலும், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மாத்தளை, பொலன் னறுவை மாவட்டங்களிலும் இடைக் கிடையே மழை பெய்யுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், அநுராதபுரம் மாவட்டங்களில் மழை யுடனான வானிலை நிலவுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு, மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல், தென் மாகாணங் களின் சில இடங்களில் 100 மில்லி மீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என்பதுடன், மின்னல் தாக்கம் தொடர்பில் அவ தானமாகச் செயற்படுமாறு அறி வுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு முதல் காலி, ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையிலான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் 60 முதல் 70 கிலோமீட் டர் வரையில் அதிகரிக்குமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அவதானத்துடன் செயற்படுமாறு கடற்றொழிலாளர் களுக்கு அறுவுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, பத்து மாவட்டங் களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

பதுளை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, குரு நாகல், மாத்தளை, இரத்தினபுரி, மாத்தறை மாவட்டங்களுக்கே மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.






# பாலியாறு பெருக்கெடுப்பு!

## மன்னாரில் பல பகுதிகள் நீரில் மூழ்கின

**(மன்னார் நிருபர் எஸ்.றொசேரியன் லெம்பேட்)**

மன்னாரில் நேற்று முன்தினம் மதியம் முதல் நேற்று அதிகாலை வரைப் பெய்த கடும் மழை காரணமாக கட்டுக்கரை குளம் வான் பாய ஆரம்பித்துள்ளதுடன் மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதியை ஒட்டி உள்ள பாலியாறும் பெருக்கெடுத்துள்ளது.

குறிப்பாக பாலியாறு, சிப்பியாறு முழுவதும் நிறைந்து வீதிக்கு மேலாக நீர் பாய்ந்து வருவதுடன் அருகில் உள்ள கிராமங்கள் முழுவதும் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

மேலும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆட்காட்டிவெளி மற்றும் மாந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வயல் நிலங்கள் முழுவதும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது .

அதே நேரம் மன்னார் பிரதேச செயலக பிரிவில் கடும் மழை காரணமாக ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், சாந்திபுரம் போன்ற கிராமங்களும் தீவுக்கு வெளியில் தேத்தா வட, தேவன் பிட்டி, மூன்றாம் பிட்டி போன்ற கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நிலவும் பட்சத்தில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.








# அக்கரைப்பற்று வீதிகளில் மழை நீர் தேங்கி வெள்ளம்

(சப்னா றிபாஸ்)

அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்று முன்தினம் பெய்த மழையினால் அக்கரைப்பற்று பிரதான வீதியின் உள் வீதிகள் பல முழுமையாக நீரில் மூழ்கியுள்ளன. இதனால் பாதசாரிகளும், பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.இது தொர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கேட்டுள்ளனர்.







# 3 நாடுகளின் தூதர்களுடன் வடக்கு ஆளுநர் உரையாடல்







சுவிட்சர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்களும், தென்னாப் பிரிக்கா உயர்ஸ்தானிகரும் வடமாகாண ஆளுநரைச் சந்தித்தனர்.

சுவிட்சர்லாந்து நாட்டின் இலங் கைக்கான தூதுவர் சிறி வோல்ட் (Dr. Siri Walt), ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மிசுகொஷி ஹிடேகி (MIZUKOSHI Hideaki) மற்றும் தென்னாபிரிக்காவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சாண்டைல் எட்வின் ஷால்க் (Sandile Edwin Schalk) ஆகியோர் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்று முந்தின்ச்ம் இரவு சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சிநேகபூர்வ கலந்துரையாடல் நடை பெற்றது.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப் படும் அபிவிருத்தித் திட்டங்கள், நல்லிணக்கச் செயற்பாடுகள், மாகா ணத்தில் எதிர்நோக்கப்படும் சவால் கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர் பில் சிநேகபூர்வ சந்திப்பில் கலந்து ரையாடப்பட்டது.








**உரலார் கேள்வி :- எதிர்க்கட்சித்தலைவராய் இருந்த போது அரசினால் தனக்கு வழங்கப் பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தை சம்பந்தர் காலி பண்ணிக் கொடுக்க மறுக்கிறாராமே?**

**உலக்கையார் பதில் :-** தனக்குக் கிடைத்த ஒன் றையும் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பதில்லை என்று சம்பந்தர் யாருக்கோ சத்தியம் பண்ணிக் கொடுத்திருப்பார் போல. கூட்டமைப்பு தலை



வர் பதவியையும் அவர் இப்படித்தான் வைத்து நாசமாக்கிக் கொண்டிருக்கிறார். 'ஈணவும் மாட்டாமல் முக்கவும்மாட்டாமல்' அவர் படும் பாட்டைக் கண்டு உலகமே சிரிக்கிறது. இனி யாரும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி னால்தான் சரிவருவார் போல. நான் வீட்டைப் பற்றி மட்டும்தான் சொல்கிறேன்.

**சல்லடையார் சலிப்பு :- எண்பதிலும் ஆசை வரும்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் மாணவர்களுக்கு முன்னால் ஆசிரியர்கள் 'குத்தாட்டம்' போடுகிறார்களே, அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** வெக்கக்கேட்டின் உச்சச் செயல் இது. இளைய சமுதாயத்தை வழி நடத்த வேண்டிய ஆசிரியர்களே இப்படிக் 'கூத்தாடி னால்' பின்னர் மாணவர்களை இவர்களால் எப்படி நல்வழிப்படுத்த முடியும்? மேற்கு நாட் டார்களின் அடிப்படை இல்லாத நாகரிகத்தை அப்படியே விழுங்கி நடப்பதுதான் தமக்குப் பெருமை என்று இவர்கள் நினைக்கிறார்கள். சொந்தப் புத்தி இல்லாதவர்களை 'தமக்கென ஒன்றில்லாதார்' என்று ஒரு தமிழ்ப் புலவர் பாடியுள்ளார். இத்தகைய ஆசிரியர்களை குறிக் கும் மகுடவாசகமாக அப்புலவர் சொன்ன வாசகத்தை இனி நாம் பயன்படுத்தலாம்.

தமிழர்களுக்கு என்று ஒரு தொன்மைமிக்க தனித்த பண்பாடு உண்டு. தமிழ் என்றும், தமிழ் நாடு என்றும், தனித்தமிழ் நாடு என்றும் பேசி வரும் பலருக்கு அப்பண்பாடு பற்றி ஒன்றும் தெரிவதில்லை. வெறும் 'வாய்சொல்லில் வீரர் களாய்' தம்மையும் ஏமாற்றி, சமுதாயத்தையும் ஏமாற்றி வருகிறார்கள் இவர்கள். அத்தகைய பலர் இன்று ஆசிரிய உலகத்துக்குள்ளும் நுழைந்து விட்டார்கள்.

மாணவர்களை வைத்துக் கொண்டு எப்படித் தான் இவர்களால் இத்தகைய 'கூத்துக்களை' ஆட முடிகிறதோ தெரியவில்லை. இவர்களின் இத்தகைய கோமாளிக்கூத்துக்களை பார்த்த மாணவர்கள், வகுப்பறையில் இவர்களை எப்படி மதிக்க முற்படுவார்கள்? ஆசிரிய – மாணவ உறவு பற்றி இவர்களுக்கு ஒன்றுமே தெரிய வில்லை என்பதுதான் இதற்கான அர்த்தம். மேற்கு நாட்டார் தாய்க்கு, தந்தைக்கு, காதலி– க்கு என்று உறவுகளுக்கு ஆண்டுதோறும் ஒவ் வொரு நாளை ஒதுக்கி கொண்டாடுவதைப்பார்த்து, தாங்களும் அப்படிச் செய்கிறார்களாம் இவர்கள். உலகில் சொற்பகாலம் வாழ்ந்த அனுபவத் தால் அங்கு அவர்கள் செய்யும் கூத்துக்களை, தொன்மைமிக்க நம்மினத்தாரும் செய்ய முயல லாமா? புலியைப் பார்த்து பூனை குறி சுடலாம்.




பூனையைப் பார்த்து எங்கேனும் புலி குறி சுட முயலுமா?

**(15ஆம் பக்கம் பார்க்க)**

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகளின் பெருமை தெரியாத, உறவுகளைப் பேணி வாழாத அவர்கள், உறவுகளுக்கு என ஒவ்வொரு நாள்களை நியமிப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. நியமித்த அந்த ஒரு நாளோடு அவர்களின் உறவின் புனிதம் முடிந்து போகிறது. நாம் அப்படிப்பட்டவர்கள் அல்லர். வாழும் ஒவ்வொரு தினமும் உறவுகளோடு கரைந்து வாழ்கிறவர்கள் நாம். ஒருநாளை நியமித்து ஒரு ரோஜாப் பூ கொடுப்பதோடு நம் உறவுணர்ச்சியும் முடிந்து போகிறது என்றால், நமக்கு நம் பெருமை தெரியவில்லை என்பதுதான் அர்த்தமாகும்.

ஆசிரிய லட்சணத்தை நமது பழைய இலக்கண நூலாசிரியர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். மலை போலும், நிலம் போலும், மலர் போலும், துலாக்கோல் போலும் இருக்க வேண்டியது ஒரு நல்லாசிரியனுக்குரிய லட்சணம் என்று அந்நூல்கள் உரைக்கின்றன. அதுபற்றி முழுவதுமாய் விரித்துச் சொல்ல வேண்டும் என்றால், ஏற்கனவே நீண்டுவிட்ட இப்பதில் இன்னும் நீண்டுவிடும். அதனால் ஆசிரியனுக்குச் சொல்லப்பட்ட 'மலை' என்ற உவமானம் பற்றி மட்டும் சில சொல்கிறேன்.

ஒரு மலையைக் காணுகிற பொழுது, அதன் உயரம், அகலம் என்பவை பற்றி முடிவு செய்ய முடியாது ஏற்படும் பிரமிப்பு, அதற்குள் என்னென்ன இருக்குமோ என்று அறியாமல் ஏற்படுகிற அச்சம், இதன்மேல் என்னால் என்றும் ஏற முடியாது என்று நினைக்கத் தோன்றுகிற இயலாமை என இவையெல்லாம் ஒரு ஆசிரியனைக் காணுகிற பொழுது மாணவனுக்கு ஏற்பட வேண்டும். வேறு வகையாகச் சொல்வதானால், ஒரு மாணவனுக்கு இவ் உணர்ச்சிகள் ஏற்படத்தக்கவனாக ஆசிரியன் இருக்க வேண்டும். இதற்காகவே இம்மலை உதாரணம் சொல்லப்படுகிறது என்கின்றனர்.

நம்மவர்கள் சிந்தனை இப்படியாய் இருக்க, நம் ஆசிரியர்கள் சிலர் மாணவர்களுக்கு முன்னால் 'விகடக்கூத்து' ஆடுவதை என்னென்று சொல்வது? மாணவனுக்கு முன்பாக ஓர் ஆசிரியன் மலையாக இருக்க வேண்டாம், கடைசி ஒரு குன்றாகவேனும் இருக்க வேண்டாமா? இப்படி இவர்கள் நடந்து கொண்டால், மாணவர்கள் இவர்களைப் புல்லாகவேனும் மதிப்பார்களா? கல்வியதிகாரிகள், ஆலோசகர்கள், அதிபர்கள் எனும் எல்லோரும் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்? ஒருவேளை அவர்களுக்கும் இது சரியாகப் பட்டால், கம்பனின் இராமன் சொன்னால் போல 'விதியின் பிழை மைந்தா!' என விட்டுவிட வேண்டியது தான்.

**சல்லடையார் சலிப்பு - 'ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை காண கண் ஆயிரம் வேண்டாமோ?'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- தமிழ்நாட்டு வெள்ளத்தை பார்த்தீர்களா ?**

**உலக்கையார் பதில் :-** வெள்ளமா அது? தமிழ் நாட்டிற்குள் கடல் புகுந்தாற்போல் அல்லவா இருந்தது. தமிழ் மக்கள் பட்ட இன்னல்களை ஊடகங்கள் மூலம் பார்த்து மனம் மிக வருந்தியது. அவர்களில் பலரும் தற்போதைய அரசையும் தலைவர்களையும் கடுமையாக கண்டித்து வெளியிட்ட கருத்துக்கள் அரசை ஆட்டம் காண வைப்பதாய் இருந்தன.

இயற்கை சீற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அதற்கு அரசை குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை. நடந்த சம்பவம் வெறும் காரியம்தான். அதன் காரணத்தைத்தான் நாம் ஆராய வேண்டும். காரியம் நோக்கி அரசைக் குற்றம் சாட்ட முடியாதே தவிர, நிகழ்ந்தவைக்கான காரணம் நோக்கி அரசின் மீது நிறையக் குற்றம் சுமத்தலாம்.

நீர் நிலைகள் ஒரு தேசத்தின் இரத்த நாளங்கள். அவற்றின் வற்றாத ஓட்டத்தில்தான் அத்தேசத்தின் உயிர்ப்பு தங்கியிருக்கிறது. பகுத்தறிவு, சமூகநீதி, சமத்துவம் எனப் புரட்சிக் கருத்துக்களின் சொந்தக்காரர்களாக தம்மை அறிவித்து நிற்கும் தமிழ்நாட்டின் இன்றைய அரசியலாளர்கள், தேசத்தின் உயிர்ப்புக்குக் காரணமான நீர் நிலைகளைச் சிதைக்கும் அதியுச்ச அறிவீனச்செயல்களை கண்டிக்காமல் விட்டதும், தடுக்காமல் விட்டதும் வெள்ளக்காரியத்தின் காரணங்களின் முக்கியமான ஒன்றாகிறது.

கிஞ்சித்தும் சமூகம் பற்றிய அக்கறை இல்லாத இந்தப் பாதகச் செயலுக்கு, அரசியலாளர்களின் ஆதரவும் அல்லது நேர்த்தொடர்பும் இருந்தமை பற்றி ஊடகங்கள் என்றோ வெளிப்படுத்தத் தொடங்கி விட்டன. உடன் நடவடிக்கை எடுக்கப் படவேண்டிய இந்த நிகழ்கால பிரச்சனையை விட்டுவிட்டு, என்றோ பிறந்து நிலைத்து நிற்கும் 'சனாதனதர்மத்தை' அழிப்பதற்காய் போர்க்



கொடி தூக்கிய இவர்களின் நடவடிக்கை நிச்சயம் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகிறது.

நமது பழைய விடயங்கள் அனைத்தையும் நிராகரிக்கும் இவர்களின் கையில் இருந்து, நமது திருவள்ளுவர் மட்டும் அதிஷ்டவசமாய் தப்பியிருக்கிறார். அந்த திருவள்ளுவர் அரசியல் பற்றிப் பேசும் தனது பொருட்பாலில், 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற ஒரு அதிகாரத்தை அமைத்திருக்கிறார். அவ் அதிகாரத்திற்கு உரை எழுதுகையில், பரிமேலழகர் எனும் பேரறிஞர் 'அரசர்க்கும் அங்கங்களுக்கும் மானுடத் தெய்வ குற்றங்கள் வாராமல் காப்பதற்கு உரிய அமைச்சர், புரோகிதர் முதலானோரே மேற் குறித்த பெரியோர்' என்று எழுதுகிறார். இங்கு அவர் குறித்த புரோகிதர் என்பவர் வேதங்களைக் கற்றறிந்த பெரியோரேயாம்.

மனிதர்களால் வரும் குற்றங்களை அறிந்து காக்க வேண்டியவர்கள் அமைச்சர்கள். இயற்கையின் சீற்றங்களை முன் நிகழும் தீச்சகுணங் களால் அறிந்து, அவை வாராமல் காக்க வேண்டியவர்கள் புரோகிதர்கள். இன்று என்று இல்லை, பலகாலமாகவே தமிழ் நாட்டுக்கு வாய்த்த அமைச்சர்கள் தமக்கான பொருள் ஈட்டும்

(16ஆம் பக்கம் பார்க்க)

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியையே தமது முதற்கடமையாய் நினைந்து வருவதால் அவர்களால் மக்களுக்கு என்றுமே பயன்விளைந்த பாடாய் இல்லை.

இன்றைய அரசியலாளர்களுக்கு, நமது இந்து மதமும், அதன் கொள்கைகளும் அதன் ஆழ்ந்த தத்துவங்களும் வேதமந்திரங்களும் அவற்றை இன்றுவரை தக்க வைத்திருக்கும் புரோகிதர்களும் வேம்பாய் கசக்கின்றனர். நமது வேதமந்திரங்களுக்கு இயற்கைச் சீற்றங்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் இருக்கிறது என்பதை அவர்கள் நம்பத்தயாராக இல்லை. அவர்கள் தமது நலன் நோக்கியும் வாழ்வு நோக்கியும் கட்சியின் வெற்றி நோக்கியும் இரகசியமாகச் செய்து வரும் பூசைகள், வேள்விகள் பற்றி அறியும் போது அப்படியும் சொல்லிவிட முடியாது போல் இருக்கிறது. சுயநலத்திற்காக வேதங்களை நம்புகிறவர்கள் பொதுநலத்திற்காகவும் அவற்றை நம்பியிருந்தால் இன்றைய இயற்கைச் சீற்றம் விளைந்திருக்காது. கையில் மருந்து இருந்தும் உண்ணாமல் நோய் வரவிட்டது அவர்களின் மன்னிக்க முடியாத குற்றமேயாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக சீற்றம் நிகழ்வதற்கு ஓரிரு நாள்களுக்கு முன்பாகவே, இயற்கைச் சீற்றம் விளையப் போவதை, அறிந்த பின்பும் அதன் பாதிப்பை தடுக்கும் வகையில் அரச இயந்திரத்தை வேகமாக இயங்கச் செய்யாமல் இருந்துவிட்டு, பாதிப்புற்ற மக்களிடம் இயற்கைச் சீற்றம் இயல்பானதுதான் என்பது போல சமாதானம் சொல்ல முயல்வதும், குறை சொன்ன மக்களை ஆறுதல் செய்ய முனையாமல் அவர்கள் மேல் சீறி விழுந்ததும் அவர்கள் வாய்திறந்து கதறிய பிறகும் மீட்பு முயற்சிகளைப் போர்க்கால நடவடிக்கையாய் செய்யாமல்விட்டதும் வெறும் விளம்பரங்களுக்காக மட்டுமே ஆங்காங்கு மக்களை சந்திக்க முயன்றதும் மாபெரிய குற்றங்கள் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

ஏற்கனவே அமைச்சர்களால் தான் தூக்கம் தொலைப்பதாகப் பகிரங்கமாய் குற்றம் சாட்டிய முதலமைச்சரின் தூக்கத்தை இந்த இடர் மேலும்கெடச் செய்திருக்கிறது. அவரைக் கடவுள் காப்பாற்றுவாராக!

**சல்லடையார் சலிப்பு :- அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாகும்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பெரிய வெங்காயம் வழங்க இந்தியாவிடம் கோரிக்கை

இந்தியாவில் ஏற்றுமதித் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் இந்தியாவிடம் இருந்து பெரிய வெங்காயத்தை கொள்வனவு செய்யக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு நாட்டிற்குத் தேவையான பெரிய வெங்காயத்தை வழங்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரிடம் இதற்கான கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

75 ஆயிரம் மெட்ரிக் தொன் வெங்காயத்தை இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்ததை தொடர்ந்து, இலங்கையில் வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

தற்போது உள்நாட்டு சந்தையில் ஒரு கிலோகிராம் வெங்காயம் 550 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

விலை அதிகரிப்பை தொடர்ந்து பாகிஸ்தானிடம் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்தியாவின் ஏற்றுமதித் தடையைத் தொடர்ந்து பாகிஸ்தான் வெங்காயத்தில் விலை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு, இறக்குமதியாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.






# டெங்கு நோய் தொடர்பான முறைப்பாடுகளுக்கு வடக்கில் 24 மணி நேர தொலைபேசிச் சேவை!

வடக்கு மாகாணத்தில் டெங்கு நோய் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு 24 மணி நேர தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

0761799901 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு நேரடியாக தொடர்பு கொண்டும் வட்ஸப் மூலமாகவும் முறையிட முடியும். முறைப்பாடுகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் இந்த வருடத்தில் சுமார் 3,100 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் டெங்கு நூளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களில் இரண்டு மரணங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் ஒருவர் யாழ் நகரத்தைச் சேர்ந்தவர். மற்றையவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவராவார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் டெங்கு நூளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் தங்கள் சார்ந்த இடங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஒருவருக்குக் காய்ச்சல் எற்பட்டால் உடனடியாக தகுதிவாய்ந்த வைத்தியரை நாடுவது சாலச் சிறந்தது. – என்றார்.

# மட்டு சிறையில் கைதி அடித்துக் கொலை: சக கைதிகள் இருவருக்கு விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சக கைதிகளால் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணையின் மூலம் அடையாளம் காணப்பட்ட – வாழைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த – சந்தேக நபர்களான இரு கைதிகளுக்கு எதிராக பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகத. வரைக்கும் விளக்கமறியல் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.




கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய சோமசுந்தரம் துரைராஜா என்ற குடும்பஸ்தர் கசிப்புத் தொடர்பான வழக்கு ஒன்றில் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் நீதிமன்றம் பிறப்பித்த பிடிவிறாந்தின் அடிப்படையில் கடந்த நவம்பர் 22 ஆம் திகதி கொக்கட்டிச்சோலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அடுத்த நாள் 23 ஆம் திகதி களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் அவர் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரைப் பிணை எடுப்பதற்கு எவரும் இல்லாத நிலையில், மட்டு சிறைச்சாலையில் அவர் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் மீது சக கைதிகள் தாக்குதல் மேற்கொண்டனர் என்று கூறப்படுகின்றது. அவர் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்ட நீதிவான் பீற்றர் போல் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவர் மீது மொட்டையான ஆயுதத்தால் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் எனக் கண்டறியப்பட்டது. பின்னர் உறவினரிடம் சடலத்தை ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக மட்டு தலைமையகப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணையை முன்னெடுத்தனர்.

உயரிழந்தவருடன் 9 கைதிகள் சிறைக்கூட அறை ஒன்றில் இருந்துள்ளனர். இந்த நபர் தொடர்சியாக கசிப்புத் தேவை என சத்தமிட்டு வந்துள்ளார். இதனால் சக கைதிகளுக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அவர் மீது சக கைதிகளான வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக அவர் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸாரின்ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் எனக் கருதப்படும் இருவரும் போதைப்பொருள் விவகாரம் தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.




# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹோட்டன் சமவெளிக்கு விஜயம்

உயர்தர சுற்றுலாத்துறையை இலக்கு வைத்து ஹோட்டன் சமவெளியை (Horton Plains) அண்மித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவிற்கான கண்காணிப்பு விஜயமொன்றை ஜனாதிபதி மேற்கொண்டிருந்த போதே இதனைத் தெரிவித்தார்.

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவிற்கு ஜனாதிபதி நேற்றுச் சென்றிருந்தார்.

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவை அண்மித்துள்ள வனஜீவராசிகள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான இடங்களை வரைபடத்தின் மூலம் மேற்பார்வை செய்த ஜனாதிபதி, ஹோட்டன் சமவெளி தேசிய பூங்கா, அதனைச் சார்ந்த பகுதிகளை உள்ளடக்கிய புதிய வரைபடத்தைத் தயாரித்து விரைவில் தன்னிடம் கையளிக்குமாறும் வலியுறுத்தினார்.

ஹோட்டன் சமவெளியை அண்மித்த பகுதிகளை உயர்மட்ட சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து அபிவிருத்தி செய்யும் பட்சத்தில், அதிகளவான வெளிநாட்டு வருவாயை ஈட்ட முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.






# மஸ்கெலியா – நோட்டன் பிரதான வீதியில் மண் சரிவினால் போக்குவரத்துப் பாதிப்பு!

**(மஸ்கெலியா விசேட நிருபர் செ.தி.பெருமாள்)**

மஸ்கெலியா – நோட்டன் பிரதான வீதியில் 5 ஆம் கட்டைக்கு அருகாமையில் மண் திட்டு சரிவால் வீதி போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

நேற்றய் இப்பகுதியில் பெய்து வந்த மழையால் நேற்றிரவு 7. 30 மணியளவில் இந்த மண் மேடு சரிந்து விழுந்ததுள்ளது என நோட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இது குறித்து நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கவனத்திற்கு நோட்டன் பொலிஸார் கொண்டு சென்று உள்ளனர்.

இந்த வீதி ஊடாக மஸ்கெலியா – கொழும்பு, மஸ்கெலியா – கன்டி, மஸ்கெலியா – தெரணியாகல, மஸ்கெலியா – நாவலப்பிட்டி, மஸ்கெலியா – கினிகத்தேன ஆகிய பகுதிகளுக்கு செல்வோர் மாற்று வழியாக ஹட்டன் வீதியூடாக பயணிக்கும்படி மஸ்கெலியா, நோட்டன் பொலிஸார் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.12.2023




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள்.உங்கள் வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களைப் பெறுவீர்கள்.

பணியில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் கூடுதல் முயற்சி செய்து சிறந்த செயல்திறனை அளிப்பீர்கள். உங்களின் சிறந்த தவகல் தொடர்பு திறமை மூலம் பல நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் திருப்தி காணப்படும். அவருடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

தொழில் செய்பவர்கள் நற்பலன் காணும் அதிர்ஷ்டமான நேரம். புதிய தொழில் தொடர்புகள் பெறலாம். அதன் மூலம் அதிக பணம் பெற இயலும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் இலக்குகளை அடைய மிகவும் பொறுமை வேண்டும். நம்பிக்கையுடன் இருந்தால் நல்ல வளர்ச்சி காணலாம்.

உங்கள் முன் இருக்கும் சவாலான பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணிபுரிவதன் மூலம் உங்கள் பணிகளை திறமையாக முடிக்கலாம்.

உங்கள் துணையுடன் அன்பை பகிர்ந்துகொள்வதற்கு சாதகமான நாள் அல்ல. சுமூகமான உறவு அமைய நீங்கள் அனுசரித்து நன்கு புரிந்துணர்வுடன் நடத்தல் வேண்டும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று நல்ல பலன்கள் காண்பதற்கு சாதகமான நாள் அல்ல. இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். கடுமையான சூழ்நிலையை புத்திசாலித்தனமாக கையாள வேண்டும். சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களில் அமைதி காண வேண்டும்.

உங்கள் பணிகளில் தவறுகள் நேரலாம். அதிக கவனம் செலுத்துவதன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று ஏற்படும் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

பண இழப்பு காணப்படுகின்றது. உங்கள் நிதி நிலையைக் கையாளும்போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

பதட்டம் மற்றும் பாதிகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்கும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவும் அதன் மூலம் நன்மையும் பெறுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் சிறந்த வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக திருப்தியான நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் முன் மகிழ்சியான வாழக்கை உள்ளதாக நினைத்து மகிழ்வீர்கள். புதிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். கையிலுள்ள உபரிப் பணத்தைக் கொண்டு நீங்கள் பயனுள்ள சொத்தை வாங்குவீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. பதட்ட உணர்வு காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இந்த உணர்வுகளை நீங்கள் சமாளிக்க வேண்டும்.நல்ல பலன் காண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் செயலாற்ற வேண்டியது அவசியம். இதன் மூலம் எதிர்கொள்ளும் தடைகளை ஜெயிக்க முடியும்.

கருத்து வேறுபபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் துணையின் கருத்துக்களை புரிந்து கொண்டு இருவரும் பரஸ்பரம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பண வரவிற்கு இன்று சாத்தியமில்லை. கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று நீங்கள் உற்சாகமான ஆற்றலுடன் காணப்படுவீர்கள். நீங்கள் குறைந்த எதிர்பார்ப்புடன் கடினமாக உழைப்பீர்கள். இதனால் நற்பலன்கள் ஏற்படும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் அமைதியாக இருக்க முடியும்.

இன்று பணியில் மந்தத் தன்மை காணப்படும். உங்கள் செயல்களைக் கையாளும்போது பொறுமை இழப்பீர்கள். கவனமுடன் இருந்தால் சிறப்பாக செயலாற்ற இயலும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் அதிருப்தி காணப்படும். இருவரும் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.

உங்கள் வீட்டின் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் செலவுகள் அதிகமாகும். உங்களின் நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.




ஷஇன்று பலன்கள் கலந்து காணப்படும். அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். இன்றைய செயல்களைக் கையாள நீங்கள் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டியது அவசியம். உங்கள இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். அது உங்கள் சுய முயற்சியை சார்ந்துள்ளது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களை அடைய உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டியது முக்கியம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நல்ல புரிந்துணர்வு ஏற்பட இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை அடைய புத்திசாலித்தனமாக முயல்வீர்கள். இது உங்களின் வளர்ச்சிக்கு உதவும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். நீங்கள் தரமான வகையில் பணிகளை முடித்துத் தருவீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு மேம்படும்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். கையில் உபரிப் பணம் காணப்பட்டு மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஆன்மீக காரியங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.12.2023




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது அல்லது திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்சிகளின் மூலம் நீங்கள் இன்றைய நாளை சிறப்பக கையாண்டு மகிழ்ச்சியாக இருக்கலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். எனவே உங்கள் பணியில் தாமதங்கள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இரவரும் எதிரெதிர் கருத்து கொண்டிருப்பீர்கள். இதனால் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு குறைவாக இருக்கும்.

இன்று எந்த விதமான ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது.




இன்று உணர்ச்சி வசப்படுவதை விட யதார்த்தமாக இருப்பதற்கான சூழ்நிலை காணப்படும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் அமைதியாக நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் நீங்கள் மன அமைதி பெறலாம்.

உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பணியில் தவறுகளை தவிர்க்க வேண்டும். சக பணியாளர்களிடமிருந்து தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

இன்று ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் பிறருடன் பழகும் போது கவனமாகப் பழக வேண்டும். சிறிதளவு பரிச்சயமானவர்களிடம் இன்று தவறான புரிந்துணர்வு ஏற்படும். தேவையற்ற விளைவுகளை தவிர்க்க நீங்கள் உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நல்ல பலன்களைக் காண நீங்கள் முறையாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையேயான உறவுமுறை பாதிக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டு மனம் திறந்து பேசுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும்.




இன்று வளர்ச்சி காண்பதற்கு மிகவும் உகந்த நாள். இன்று வாழ்க்கையின் உண்மைகளை அறிந்து கொள்வதற்கான நேரம். இது மகிழ்ச்சி தரும் கற்றல் அனுபவமாக இருக்கும்.

பணியில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் அனைத்துப் பணிகளிலும் திருப்தி காண்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

இன்று அதிகப் பணம் காணப்படும். கையிலுள்ள பணத்தை பயனுள்ள நோக்கங்களுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park